சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி
முன்னிலை: **திரு.M.மணிகண்டன், M.A., M.L., PG.D., C.F.Sc.,**
சார்பு நீதிபதி பொள்ளாச்சி

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
(2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை திங்கள் 04 ம் நாள்)

**மேல்முறையீட்டு அசல் வழக்கு எண். 21/2024**
**CNR No.TNCB11-001223-2024**

T.ஸ்ரீகுமார், த/பெ. தங்கப்பன், இந்து, வயது 73, வசிப்பிட முகவரி தோட்டத்து சாலை, மண்ணூர், பொள்ளாச்சி, கோயமுத்தூர்.

... மேல்முறையீட்டாளர் / 5 ம் பிரதிவாதி

/ எதிர் /

1. S.சம்பூரணம், க/பெ. சண்முகம், இந்து, வயது 61, வசிப்பிட முகவரி கதவு எண்.36, தன்னாசியப்பன் கோவில் தெரு, பொள்ளாச்சி, கோயமுத்தூர்.

... எதிர்மனுதாரர் / வாதி

2. M.சிவபாக்கியம், க/பெ. முத்துச்சாமி கவுண்டர், இந்து, வயது 62, வசிப்பிட முகவரி சின்னக்கவுண்டர் தோட்டர், ராமபட்டிணம், பொள்ளாச்சி, கோயமுத்தூர்.

3. K.ஆறுமுகம், த/பெ. லேட். காளியப்பகவுண்டர், இந்து, வயது 65, வசிப்பிட முகவரி மண்ணூர் அஞ்சல், பொள்ளாச்சி, கோயமுத்தூர்.

4. K.கவிதா, த/பெ. கிருஷ்ணசாமி, இந்து, வயது 34, வசிப்பிட முகவரி பத்ரகாளியம்மன் கோவில் களம், பெரிய சிறம்பி, மீனாட்சிபுரம், சித்தூர் தாலூக்கா, பாலக்காடு மாவட்டம், கேரளா.

5. கிருஷ்ணசாமி, த/பெ. காளியப்ப கவுண்டர், இந்து, வயது 52, வசிப்பிட முகவரி பத்ரகாளியம்மன் கோவில் களம், பெரிய சிறம்பி, மீனாட்சிபுரம், சித்தூர் தாலூக்கா, பாலக்காடு மாவட்டம், கேரளா.

6. உமா தேவி, க/பெ. கனகராஜ், த/பெ. முத்துச்சாமிகவுண்டர், இந்து, வயது 47, வசிப்பிட முகவரி மண்ணூர் களம், பாலக்காடு ரோடு, மண்ணூர் அஞ்சல், பொள்ளாச்சி தாலூக்கா.

7. இந்திரா தேவி, த/பெ. முத்துச்சாமி, இந்து, வயது 45, வசிப்பிட முகவரி சின்னக்கவுண்டர் தோட்டம், ராமபட்டிணம், பொள்ளாச்சி தாலூக்கா.

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடானது பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.465/2006 வழக்கில் 20.06.2024–ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி அசல் வழக்கில் கண்ட 6, 7 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**விசாரணை நீதிமன்ற அசல் வழக்கு எண். 465/2006**

S. சம்பூரணம் ... வாதி

/ எதிர் /

1. M.சிவபாக்கியம்
2. K.ஆறுமுகம்
3. K.கவிதா
4. கிருஷ்ணசாமி
5. T.ஸ்ரீகுமார்
6. உமா தேவி
7. இந்திரா தேவி ... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடானது பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.465/2006 வழக்கில் 20.06.2024ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி அசல் வழக்கில் கண்ட 6, 7 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் 20.09.2024

மேல்முறையீட்டு வழக்கு மதிப்பு ரூ.97,500/− இம்மனுவிற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 37(2) மற்றும் உடன் இணைந்த பிரிவு 52ன் கீழ் முத்திரை கட்டணம் ரூ.100/− செலுத்தப்பட்டுள்ளது.

**மதிப்பீட்டு விபரம்**

| | |
|---|---|
| தாவா சொத்திற்கான மொத்த மதிப்பு | ரூ.3,90,000/− |
| வாதிக்குரிய ¼ பாகத்தின் மதிப்பு | ரூ. 97,500/− |
| நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 37(2)ன்படி | ரூ.100/− |

செலுத்தப்பட்டுள்ளது.

இம்மேல்முறையீட்டு வழக்கானது கடந்த 09.04.2026ம் தேதியன்று இறுதியாக இந்நீதிமன்றம் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.K.A.சுப்பிரமணியம், அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.P.K.ரவீந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.V.லிங்கராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 3, 5 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ள நிலையிலும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.S.தேவசேனாதிபதி அவர்கள் முன்னிலையாகியும், 6, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.Su.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும் பின்னிட்டு, இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் இன்று வழங்கும்

**இறுதி உத்தரவு**

1) இந்த மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

2) இவ்வழக்கின் செலவுத் தொகைகளை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

**செலவுத்தொகை பட்டியல்**

(இருதரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

## DESCRIPTION OF PROPERTY

**அயிட்டம் 1 A (05.03.1995 பாகசாசனப்படி காளியப்ப கவுண்டர் பெற்ற பூமி) :-**

திருப்பூர் ரிடிடு ஷை சப்டி ஷை ராமபட்டணம் கிராமம் புலத்தில் 62 நெ. பட்டா க.ச.214 நெ. காலை பு.ஏ.11.18 ல் பைக்கு வெ.கந்தசாமிக் கவுண்டர் பூமிக்கும் மேற்கு, ஆ.செல்லக்குமாரசாமிக் கவுண்டர் பூமிக்கும் தெற்கு, ஷை காலையில் 3 லக்கமிட்டவர் பங்கு பூமிக்கும் கிழக்கு, சுப்பேகவுண்டர் வகையறா பூமிக்கும் வடக்கு, இதன்மத்தியில் பு.ஏ.4.67. பின்னும் 64 நெ. பட்டா க.ச.215 நெ. காலை பு.ஏ.11.55, இதில் மு.நாச்சிமுத்து கவுண்டர் பூமிக்கும் தெற்கு, மேற்படி காலையில் 3 லக்கமிட்டவர் பங்கிற்கும் கிழக்கு, 214 ம் நெ.காலைக்கும் வடக்கு, ஆ.செல்லக்குமாரசாமிக்கவுண்டர் பூமிக்கும் மேற்கு, இதன் மத்தியில் பு.ஏ.1.74. பின்னும் ஷை கிராமம், 246/3B நெ. காலையில் பு.ஹெக்.3.310 க்கு பு.ஏ.8.18. மேற்படி மண்ணூர் கிராம புலத்தில் 104 ம் பட்டா, 303 ம் நெ. காலை பு.ஏ.7.46 இதில் கிழமேல் பாலக்காடு ரோட்டிற்கும் தெற்கு, வீரப்பகவுண்டர் வகையறா பூமிக்கும் கிழக்கு, மயில்சாமிக்கவுண்டர் பூமிக்கும் மேற்கும், வடக்கும், இதன் மத்தியில் பு.ஏ.1.86 ½ T.D. 365 ம் நெ. பட்டா க.ச.222 நெ. பு.ஏ.8.75 ல் பாலக்காடு ரோட்டிற்கும் வடக்கு, ஊர் மந்தைக்கும் கிழக்கு மேற்படி காலையில் 1 லக்கமிட்டவர் காலைக்கும் தெற்கு, 223 ம் நெ. காலைக்கும் மேற்கு இதன் மத்தியில் பு.ஏ.3.73. 71 ம் நெ.பட்டா க.ச.223 ம் நெ. பு.ஏ.9.54 ல் இந்த பாகஸ்தருக்கு 222 ம் நெ. காலையில் பிரிந்துள்ள பங்கு பூமிக்கும் கிழக்கும், தெற்கும், பழனியம்மாள் பூமிக்கும் 1 லக்கமிட்டவருக்கு

223ம் நெ.ல் பிரிந்த பங்கு பூமிக்கும் மேற்கு, 222ம் நெ.காலைக்கும் வடக்கு, இதன் மத்தியில் பு.ஏ.0.27 மேற்படி இரண்டு கிராமங்களிலும் சேர்ந்து ஒட்டு பு.ஏ.20.45 ½ இந்த பூமிக்கு மாவடை, மரவடைகளும் சகிதம்.

**அயிட்டம் – 1B (21.03.1962ல் மாரிமுத்துக்கவுண்டரின் உயில்சாசனப்படி காளியப்ப கவுண்டர் அடைந்த A செட்யூல் சொத்துக்கள்) :-**

திருப்பூர் ரிடிடு, பொள்ளாச்சி சப்ரிடிடு, பொள்ளாச்சி தாலூக்கா, இராமபட்டணம் தாக்கல், மண்ணூர் கிராமபுலத்தில் T.D.365 நெ. பட்டா க.ச.222 நெ.பு.ஏ.8.75, இதில் மண்ணூர் மந்தைக்கும், அருணாச்சல கவுண்டர் பூமிக்கும் கிழக்கு, இராமபட்டிணம் எல்லைக்கும் தெற்கு, 223ம் காலைக்கும் மேற்கு, மேற்படி காலையில் 2 லக்கமிட்டவர் பங்கு பூமிக்கும் வடக்கு, இதன் மத்தியில் பு.ஏ.4.69.

பின்னும் 71ம் நெ.பட்டா, க.ச.223ம் நெ. காலை பு.ஏ.9.54, இதில் குமாரசாமிக்கவுண்டர் அடையும் பு.ஏ.4.27 விஸ்தீரண பூமிக்கும் மேற்கு, என் மனைவி பழனியம்மாள் பூமிக்கும் வடக்கு, மேலே கண்ட 4.69 பூமிக்கும் கிழக்கு, குமாரசாமி கவுண்டர் வேறுபாக பூமிக்கும் தெற்கு, இதன் மத்தியில் பு.ஏ.0.63, ஆக இரண்டு காலைகளுக்கும் சேர்ந்து ஒட்டு 5 ஏக்கர் 32 செண்ட் விஸ்தீரணமுள்ள பூமிகளும் மேற்படி 222ம் நெ.ல் உள்ள மேற்கண்ட 4.69 பூமிகளிலும் மேற்கண்ட 223ம் நெ.ல் உள்ள மேற்கண்ட 0.63 பூமியிலும் சேர்ந்து கட்டியிருக்கும் கிழக்கு பார்த்த 2 அங்கண வில்லை களத்துச்சாளையும், பின்னும் 222 நெ. வடபுறம் உள்ள இரண்டு துளை துருஸ்து கிணற்றில் வாரத்தில் 6 நாள் தண்ணீர் பாத்தியம் உண்டு. இந்த பாத்தியத்திலிருந்து பழனியம்மாளுக்கு பாத்தியப்பட்ட மேற்கண்ட க.ச.223 நெ.ல் உள்ள பங்கிற்கு வாரத்தில் 2 நாள் தண்ணீர் பாத்தியதை ஏற்கனவே கொடுத்திருப்பது போக மீதி உள்ள தண்ணீர் பாத்தியம் மட்டும் மேற்கண்ட 5.32 ஏக்கர் பூமிக்கு சேரத்தக்கது.

**<u>அயிட்டம் 2 (ராஜம்மாள் பெயரில் கிரயம் பெற்ற சொத்துக்கள்) :-</u>**

பின்னும் மேற்படி ரிடிடு, பொள்ளாச்சி சப்ரிடிடு பொள்ளாச்சி தாலூக்கா இராமபட்டணம் தாக்கல், மண்ணூர் கிராமப்புலத்தில் 27 நெ.பட்டா, க.ச.155 நெ. காலையில் பு.ஏ.12.14 இதில் பொதுவில் பாதி பு.ஏ.6.07 இந்த 6 ஏக்கர் 7 செண்ட் விஸ்தீரணமுள்ள பூமி மட்டும் மற்றும் மாமூல் தட பாத்தியம் சகிதம்.

இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17–ம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

**ஒப்பம்/–(M.மணிகண்டன்)**
**சார்பு நீதிபதி, பொள்ளாச்சி.**

**<u>நகல்</u>**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி.

**<u>இறுதி உத்தரவு</u>**

AS No.21/2024
நாள்: 17.04.2026